பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தி –

தொழிலாளர் விரோத தி.மு.க. அரசை கண்டித்து சிவகாசியில் ஆர்ப்பாட்டம்!

விருதுநகர் வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு – முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வேண்டுகோள்!

விருதுநகர், ஆக. 14 - விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

விருதுநகர் மாவட்டத்தின் அச்சாணியாகவும், லட்சக்கணக்கான ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரமாகவும் திகழும் சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் பட்டாசு உற்பத்தி தொழிலை முடக்கும் வகையில், ஆய்வு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் தி.மு.க. அரசின் தொழில் விரோத - தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தியும், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 16.08.2026 - ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.00 மணியளவில் சிவகாசி பேருந்து நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் / நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நூறு மடங்கு சொத்து வரி உயர்வு

சென்னை மக்கள் தலையில் பேரிடி!

முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டன அறிக்கை!

சென்னை, ஆக. 14- நூறு மடங்கு சொத்து வரி உயர்வு என்றும் சென்னை மக்கள் தலையில் பேரிடி என்றும் முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கடந்த சில நாட்களாகவே சென்னையில் மக்கள் பரபரப்பாக பேசிக் கொண்டிருக்கிற ஒரு செய்தி சொத்து வரி உயர்வு. சென்னை மாநகராட்சியின் சார்பில் சொத்து வரியினை எப்போதாவது ஒருமுறை உயர்த்துவது என்பது வாடிக்கைதான். ஆனால் இந்த அளவுக்கு மக்கள் தலையில் பேரிடியாக அது இருக்காது. ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் மதிப்பீட்டில் இருந்து ஐந்து அல்லது பத்து சதவீதம் உயர்வு என்பது இருக்கத்தான் செய்யும்.

ஆனால் தற்போதைய உயர்வு என்பது ஒரு சில இடங்களில் நூற்றுக்கு நூறு சதவீதமும் ஒரு சில இடங்களில் நூற்றுக்கு 300 சதவீதம் அளவிற்கு சொத்து வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. எந்த ஒரு முன்னறிவிப்பு இன்றி இப்படி எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற வகையில் சொத்து வரி உயர்த்தி இருப்பது என்பது மக்களுக்கு மிகப் பெரிய இன்னலை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த நிலை எப்படி உருவானது என்ற காரணம் கேட்டால் அரசு தரப்பில் ஒரு வகையான பதில் தரப்படுகிறது. அதாவது வரி மதிப்பீடுகள் என்பது பரப்பளவை விட குறைவாக மதிப்பிடப்பட்ட குடியிருப்புகள் மாநகராட்சி அலுவலர்களால் கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு இந்த வரிகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது என்றும், குடியிருப்பு வகைப்பாட்டில் சொத்து வரி செலுத்தி விட்டு அதனை வணிகப் பயன் பாட்டிற்கு பயன்படுத்தி வருகிற உரிமையாளர்களுக்கு சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பு கூறுகிறது.

ஆட்சிக்கு வந்து மூன்று மாத காலத்தில் இதை இவர்கள் எப்படி கண்டறிந்திருக்கக்கூடும் என்பது பொதுமக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ள ஒரு கேள்வி. ஏற்கனவே மின் சார கட்டணம் பல மடங்கு உயர்ந்த நிலையில் சொத்துவரி உயர்த்தியிருப்பது என்பது ஏற்புடையதாக இல்லை என்று பொதுமக்கள் இதற்கு தங்கள் எதிர்ப்பத் தெரிவிக்கிறார்கள்.

சொத்து வரி உயர்த்த வேண்டும் என்று சொன்னால் அதற்கென்று முறையான வழிமுறைகள் இருக்கிறது. வழக்கமாக மாநகராட்சி மன்ற கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு இந்த சொத்து வரி உயர்வு என்பது முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் இது மன்ற கூட்டத்தில் வைக்கப்படாமல் சர்வாதிகாரமான முறையில் அறிவிக்கப்பட்டு இருப்பது என்பது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், பல்வேறு துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய முதலமைச்சர் தனது நேரடி கட்டுப்பாட்டில் இந்தத் துறையை வைத்திருப்பதால்தான் சிக்கல் எழுகிறது. இதற்கென்று ஒரு அமைச்சரை நியமித்து அவர் மூலம் இத்தகைய நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ள வேண்டும்.

எது எப்படியோ ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கிறபோது மக்களுக்கான நலத்திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு வழி இல்லாத ஒரு அரசு மக்கள் மீது மேலும் சுமைகளை வைப்பது என்பது ஒரு மோசமான நடைமுறையாக இருக்கும். எனவே சொத்து வரி உயர்வு குறித்து பரிசீலித்து முறையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில்

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் 'போராளி ஓய்வதில்லை' மாபெரும் புகழரங்கம்!

ஆ.இராசா எம்.பி. – சுப. வீரபாண்டியன் – சூர்யா கிருஷ்ணமூர்த்தி – மேயர் பிரியா சிறப்புரை!

சென்னை, ஆக.14- சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் 'போராளி ஓய்வதில்லை' முத்தமிறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவுநாளை யொட்டி நடைபெறும் மாபெரும் புகழரங்கத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா.எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மேயர்.பிரியா ராஜன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி 'போராளி ஓய்வதில்லை' மாபெரும் புகழரங்கம் போராளி 5 "தமிழ்நாடு உயர்ந்தது அவர் கையால் சரித்திரம் மலர்ந்தது அவர் மையால்" எனும் தலைப்பில் நாளை (15.08.26 சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை, மங்களபுரம் சந்திரயோகி சமாதி சாலையில் வட்டக் கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம். சாமி கண்ணு, சரிதா மகேஷ் குமார் எம்.சி, புனிதவதி எத்திராஜன் எம்.சி., பி. உதயசங்கர், நா.துலுக் காணம், இரா.வீரமணி, எம். பெரோஸ்கான், கா.ராஜ் முஹம்மது, டி.லோகேஷ், பெரம்பூர் ஆர். ராஜன், எம்.சரவணன், ரமணி, லோகேஷ், தமிழ்ச்செல்வி சசிகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

தில்லை கதிரவன், புல்லட் கி.ரமேஷ் கிணார் ஆறுமுகம், அ.புவனவதி, ஆ. கோவிந்தன், த. கருணாநிதி, பி சுகுமார், அ. கருணாநிதி, வனஜா சண்முகம், பரிமளா சுரேஷ் பாபு, பொல்லு டி. சுரேஷ் ,எம் தமீம், எஸ் சசிகுமார், எஸ் வெங்கடேசன், வி.கா. வெங்கடேசன், பா.பி.தாஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா.எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர். சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான திருமதி பிரியா ராஜன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மேலும் இப் புகழரங்கத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., வழக்கறிஞர் தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், புலவர் சாமி நாகப்பன் க. எழிலன், எஸ் மணி முடி, வே. உமாகாந்த், பி.கே.மூர்த்தி, எம் விஜயகுமார், கே எஸ் எம். நாதன், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், ஆர்.வரதன், தேடல்.புருஷோத்தமன், மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், இசுட் ஆசாத்,

பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ. நாகராஜன், சொ. வேலு, வி. சுதாகர், எஸ். ராஜசேகர், டி.எஸ். பி. ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், எஸ். முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர் செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ.மணி, ஏ.பி.பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், எம். இப்ராஹீம் கனி, இரா கலைச் செல்வி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ.பாலமுருகன்,க. வினோத் ,எஸ் தனசேகர், பா ஜெகதீஷ், ஜி.ஜே பிரபு, ஆர்டி சங்கர் நானா,பி. ஸ்ரீராமுலு,நாரஞ்சித் விஜயா லயன், ஜி தாமோதரன், , கு கிருஷ்ணமூர்த்தி, பி. ஸ்ரீராமுலு, பி.விஜயகுமார், பா. பிரதீப் குமார் ,எல் IN சம்பத் குமார், எம் விநாயகம்,ஆர் எஸ் சித்திக், ம.அசோக் குமார், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி டாக்டர் ஜி சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி, ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்டக் கழக செயலாளர் எஸ்.புஷ்பராஜ் நன்றி கூறுகிறார்.

கழக அயலக அணிச் செயலாளர்

புதுகை எம்.எம். அப்துல்லாவின் தாயார் திருமதி நபீசா பீவி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.14-

கழக அயலக அணிச் செயலாளர் முன்னாள் எம்.பி. புதுகை எம்.எம். அப்துல்லாவின் தாயார் திருமதி நபீசா பீவி அவர்கள் நேற்று மறைந்தார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கழக அயலக அணிச் செயலாளரும் நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான சகோதரர் புதுகை எம்.எம்.அப்துல்லா அவர்களின் அன்புத்தாயார் திருமதி நபீசா பீவி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

பாசத்துடன் வளர்த்து, தன்னைச் சான்றோனாக்கி மகிழ்ந்த அன்னையை இழந்து வாடும் தம்பி அப்துல்லா அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களுக்கான வரிப்பகிர்வில்

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய நிதி வரிப் பகிர்வு அதிகரித்துள்ளது!

மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக.14-

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வு குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சில கேள்விகளை மக்களவையில் எழுப்பினார்.

"நம் நாட்டின் பொருளாதாரத்துக்கும் மற்றும் நேரடி வரி வசூலுக்கும் அதிக பங்களிப்பை வழங்கும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்தபோதிலும், மாநிலங்களுக்கான வரிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு குறைந்து வருகிறது.

மேலும் தமிழ்நாட்டுக்கான தனிநபர் அடிப்படையிலான மத்திய நிதிப் பரிமாற்றங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கிறது. இது குறித்தெல்லாம் ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள், மானியங்கள், பேரிடர் நிவாரண உதவிகள் அல்லது வேறு ஏதேனும் நிதிப் பரிமாற்றங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியில் ஏதேனும் தற்போது விடுவிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதா? அப்படி நிலுவையில் இருந்தால் எந்த வகையில், எந்தெந்த ஆண்டில் எவ்வளவு நிலுவையில் இருக்கிறது என்ற விவரங்கள் தேவை.

நிலுவையில் இருப்பதற்கான காரணங்கள் என்ன? நிலுவையில் உள்ள நிதியை மாநில அரசுக்கு விடுவிக்க காலக்கெடு ஏதும் ஒன்றிய அரசால் உத்தேசிக்கப் பட்டுள்ளதா?

தற்போதைய நிதிக் குழுவின் நிதிப் பகிர்வு அளவு கோல்கள் மக்கள் தொகை சார்ந்த குறியீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகவும், இதனால் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்திய மற்றும் சிறந்த பொருளாதாரச் செயல்பாடு கொண்ட மாநிலங்களின் நிதிப் பங்கு குறைவதாகவும் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் எழுப்பியுள்ள கவலைகளை அரசு ஆய்வு செய்துள்ளதா?

மத்திய பட்ஜெட் ஒதுக்கீடுகள் மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை நிர்வகிக்கும் தற்போதைய அளவுகோல்களை மறுஆய்வு செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

ஆகிய கேள்விகளை எழுத்துபூர்வமாக கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பினார்

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அளித்த பதிலில்,

"ஒன்றிய அரசின் சார்பில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு குறையவில்லை. மாறாக உயர்ந்திருக்கிறது.

15-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத்தில் (2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகள்) 4.079% ஆக இருந்த தமிழ்நாட்டிற்கான வரிப் பகிர்வு விகிதம், 16-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத்தில் (2026-27 முதல் 2030-31 வரையிலான நிதியாண்டுகள்) 4.097% ஆக உயர்ந்துள்ளது. அதாவது 0.018% உயர்ந்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டிற்கான தனிநபர் அடிப்படையிலான மத்திய அரசின் நிதிப் பரிமாற்றங்கள் (வரிப் பகிர்வு, மத்திய நிதியுதவித் திட்டங்கள் (CSS), நிதிக் குழு மானியங்கள் மற்றும் SASCI ஆகியவை உட்பட) 2021-22 நிதியாண்டில் சுமார் 9,500 ரூபாயாக இருந்தது. இது 2025-26 நிதியாண்டில் சுமார் 11,600 ரூபாயாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்களின் (CSS) கீழ் நிதி அனுமதி மற்றும் விடுவிப்பு ஆகியவை, அத்திட்டங்களைச் செயல்படுத்தும் ஒன்றிய அரசின் அமைச்சகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய நிதி விடுவிப்புகள், திட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் பொது நிதி விதிகள் (GFR) 2017 ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்றன. மேலும், 'SNA SPARSH' முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இத்திட்டங்களில் இணைக்கப்பட்ட ஒன்றிய நிதியுதவித் திட்டங்களுக்கான நிதி விடுவிப்பானது, மாநிலங்களின் உண்மையான செலவினங்களின் அடிப்படையில் நிகழ்நேர (real-time) அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

நிதிக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனையற்ற மானியங்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விடுவிக்கப்படுகின்றன; அதேவேளையில், செயல்திறன் சார்ந்த மானியங்கள் (நிபந்தனைக் குட்பட்ட மானியங்கள்) நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதன் அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக, 2021-22 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்தில், தமிழ்நாட்டிற்கு மத்திய நிதியுதவித் திட்டங்களின் (CSS) கீழ் 1,11,904 கோடி ரூபாயும், நிதிக் குழு மானியங்களின் கீழ் 34,513 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளன.

15-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத்தில் (2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகள்) 15.800% ஆக இருந்த தென்னிந்திய மாநிலங்களின் (ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா) பங்கு, 16-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத்தில் (2026-27 முதல் 2030-31 வரையிலான நிதியாண்டுகள்) மத்திய வரிகள் மற்றும் தீர்வைகளின் நிகர வருவாயில் 17.001% ஆக அதிகரித்துள்ளது.

ஒன்றிய அரசு அவ்வப்போது திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை மறுஆய்வு செய்கிறது. எந்தவொரு நிதியாண்டிலும் ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் ஒதுக்கீடுகள் மற்றும் ஒன்றிய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் ஆகியவை நிதி அமைச்சகம் மேற்கொள்ளும் விரிவான இடைக்கால மறுஆய்வின் அடிப்படையில் அமைகின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.

எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் நிகழ்ச்சி ஏற்பாடு!

எஸ்.பி.சற்குணபாண்டியன் 10ஆம் ஆண்டு நினைவு நாள்! 200 நபர்களுக்கு நலஉதவிகள்!

டி.கே.எஸ்.இளங்கோவன் - ஆர்.டி.சேகர் - ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் வழங்கினர்!

சென்னை, ஆக.14

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதி எரிமலை பி.எல். பாலசுப்பிரமணியம் ஏற்பாட்டில் முன்னாள் கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சற்குணபாண்டியன் அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு (13.08.2026 வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில் புது வண்ணை, கிராஸ்ரோடு பூங்கா அருகில் மலர் அஞ்சலி செலுத்தி 200 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர், சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர், பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் என்.மருதுகணேஷ், ஆகியோர் நலஉதவிகள் வழங்கினர்.

க.நாகம்மை, டி.வி.முத்துகிருஷ்ணன், கு. நற்குணம், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, எஸ்.பி.எஸ். புத்தன், எஸ். கே. இளங்கோ, என்.அனிபா, ஆர்.டி.ராஜா, என். கோவிந்தராஜ், கு.ரமேஷ், என். எம். கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், வி.முத்து, பி.அன்பழகன், எம்.எம்.சாமி, ஜெ.சுரேஷ் பாபு, ஜி.ராஜா, மீஞ்சூர் ஜி.முகுந்தன், கே.மோகன், எஸ்.எம்.டி.ரவிசந்திரன், க.ப. சாமி, எஸ்.துரை, எம். எஸ்.ரவி, தமிழ்சிவா, ,டிஎல்பி.ரவி, எல்.செல்வமணி, ஆ.இப்ராஹிம், இரா.சீமான், ஆர்.வெங்கட், வானூர் கே.ராஜி, எஸ். எம். மோகன், டி.மனோகரன், எஸ். கிருஷ்ணசாமி, ஜி.பிரேம்குமார், பி.பத்மநாபன், எஸ்.துரைசாமி, சைக்கிள் எஸ்.நடராஜன், இ.ராஜ்குமார், சுரேஷ், பால்கடை சதிஷ், பூக்கடை மணி, பேனர் எஸ். சரவணன், பிரஸ் ஆர். ரங்கநாதன், பி.ரங்கநாதன், ஏ.சுந்தரம், எல்.மோத்திலால், இ.கர்ணா, வெங்கடேசன், சலாவுதீன், என். பாட்ஷா, என்.சராபத், மைக்கேல், ஆர்.கோட்டி, என்.பி.தனுசு, என்.செல்வம், ஆர்.சந்தோஷ்குமார், இ.பிரேம்குமார், பல்தேவ் சிங், தாமரைசெல்வி, செல்வநாயகம், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எஸ்.தனக்கோட்டி, கே.சாம்சன், கே.கண்ணகி கருணாநிதி, ஆகியோர் நன்றி கூறினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ.கே.ஜெகதீசன்

ஆகஸ்ட் 14 (2020)



கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.

சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் "நச்சுக்கோப்பை" நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.

2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் "நெஞ்சுக்கு நீதி"யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.